www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

**நேரம்: 3.00 மணி** **வணிகவியல்** **மதிப்பெண்கள்:90**

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். 20x1=20

1. கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்
2. தேர்வு பொதுவாக ஒரு _______ செயலாக கருதப்படுகிறது.
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) இயற்கை ஈ) இவை எதுவும் இல்லை
3. தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையத்தின் தலைவர் யார்?
அ) இந்திய உச்சநீதிமன்றத்தின் சேவை அன்று ஓய்வு பெற்ற நீதிபதி
ஆ) பிரதம மந்திரி
இ) குடியரசு தலைவர்
ஈ) மேலே குறிப்பிட்டவை அல்ல
4. குறியிலக்க மேலாண்மையானது _______ என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.
அ) பேராசிரியர் ரெட்டின் ஆ) ஜார்ஜ் ஒடியோர்ன் இ) ஹென்றி பயோல் ஈ) எப். டபிள்யூ டெய்லர்
5. தன் வணிகர் பங்குச் சந்தையில் ஈடுபடுவது
அ) அவர்களின் வாடிக்கையாளருக்காக ஆ) தசை சார்ந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக
6. _______ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கூட்டப்படும்.
அ) சட்டமுறை ஆ) ஆண்டு பொது இ) சிறப்பு ஈ) வகுப்பு
7. புதிய பொருளாதாரக் கொள்கை _______ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015
8. _______ திட்ட அறிக்கையில் துணிகரம் செய்வதற்கான நெறிமுறையை உள்ளடக்கியது.
அ) வங்கியர் ஆ) அரசு இ) கடன் அளிக்கும் நிறுவனங்கள் ஈ) தொழில் முனைவோர்
9. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்
10. செபியின் தலைமையகம் _______ ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி
11. விளம்பரம் என்பது ஒரு _______ ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறதிறனீட்டல்
12. இணையம் மூலம் பொருட்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறையை _______ என்கிறோம்.
அ) பசுமை சந்தையிடுதல் ஆ) மின் சந்தையிடுதல்
இ) சமூக சந்தையிடுதல் ஈ) மெட்டா சந்தையிடுதல்
13. உடனடிச் சந்தை என்பது நிதிக்கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் _______ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்
அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில் இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்
14. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்
15. சந்தைப்படுத்தக்கூடிய உரிமையிலான ஆவணம், காலமுறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை _______ என்று குறிப்பிடுகிறோம்.
அ) கருவூல இரசீது ஆ) வைப்புச் சான்றிதழ் இ) வணிக இரசீது ஈ) அரசு பத்திரங்கள்
16. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990
17. சிறந்த வேலை செயல்திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன் நிலைகளை எது மேம்படுத்துகிறது?
அ) பயிற்சி ஆ) தேர்ந்தெடுப்பு இ) ஆட்சேர்ப்பு ஈ) செயல்திறன் மதிப்பீடு

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18. ஒரு நபரின் கருத்து மற்றும் எண்ணங்களின் வெளிபாட்டின் மூலம் நிறுமத்தை தோற்றுவித்தால் அவர் ________
அ) இயக்குநர் ஆ) நிறும செயலாளர் இ) பதிவாளர் ஈ) தோற்றுவிப்பாளர்
19. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர் தாங்கி ஆ) புதுமை படைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்
20. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

## பகுதி – ஆ

**II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7x2=14

21. வியாபார தொழில் முனைவோரின் இதர பெயர்கள் என்ன?
22. ஜான் F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
23. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.
24. தாராளமயமாக்கலின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை கூறுக.
25. முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA) என்பது என்ன?
26. நிறுமம் உருவாக்கத்தில் உள்ள நான்கு நிலைகள் யாவை?
27. மனித வளத்தின் சிறப்பியல்புகள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.
28. சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.
29. உடனடிச் சந்தை என்றால் என்ன?
30. சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிடுக.

## பகுதி – இ

**III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7x3=21

31. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
32. இரண்டு வகை கீறல்களின் வரைபடத்தை வரைக.
33. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?
34. நுகர்வோரியலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக. (ஏதேனும் 3)
35. மான் மற்றும் முடவாத்து – விளக்குக.
36. தொழில் முனைவோரின் வணிகப் பணிகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 3)
37. சிறப்பு தீர்மானம் என்றால் என்ன?
38. காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?
39. தொழில்நுட்ப சூழலை விளக்குக.
40. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7x5=35

41. அ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி. (ஏதேனும் 5)
42. அ) பணி வழி பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) இயக்குநரின் தகுதிகள் பற்றி கூறுக.
43. அ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. (ஏதேனும் 5)
44. அ) நிதிச் சந்தையின் பங்கினை விவரிக்கவும். *(அல்லது)*
ஆ) ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.
45. அ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின்சந்தையிலிருந்து வேறுபடுகிறது – விளக்குக. *(அல்லது)*
ஆ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. (ஏதேனும் 5)
46. அ) காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
47. அ) செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புறவளங்களை விளக்குக. (ஏதேனும் 5)

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com